விலை ரூபா: 10.00
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 தை 27 சனிக்கிழமை (10.02.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 53

ராம்கோ RAMCO MADRAS CEMENTS LTD RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## உயர்தரப் பரீட்சை ஆகஸ்ட் 6 இல்

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர் தரப்பரீட்சைகள் இவ் வருடம் ஆகஸ்ட் மாதம் 6 ஆம் திகதியிலிருந்து 31 ஆம் திகதிவரை இடம் பெறவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் அடுத்த வாரம் அனைத்து பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக் (04 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகள் 19 ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பம்

### பதிவாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகள் எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாக பதிவாளர் அறிவித்துள்ளார். பல்கலைக்கழகத்தை மீள ஆரம்பிப்பதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிலையில் கல்விச் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாக பதிவாளர் தெரிவித்தார்.

மாணவர்களுக்கான உணவு, தங்குமிடம், பிரயாணம் என்பன குறித்த ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாணவர்கள் தமக்கான உணவை நியாய விலையில் பல்கலைக்கழக சிற்றுண்டிச்சாலையில் பெற்றுக்கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

கற்றல் உபகரணங்களை மாணவர் மத்திய நிலையத்தில் நியாய விலையில் பெற்றுக்கொள்ள ஏற்பாடு (04 ஆம் பக்கம் பார்க்க)

# அநுரா, மங்கள உட்பட மூவரின் அமைச்சுப் பதவிகள் பறிப்பு!

## ஜனாதிபதி மகிந்த அதிரடி நடவடிக்கை

(கொழும்பு)

அமைச்சர்களான அநுரா பண்டார நாயக்க ,மங்கள சமரவீர மற்றும் சிறிபதி சூரியாராட்சி ஆகியோரின் அமைச்சுப் பதவிகள் நேற்றிரவு திடீரென பறிக்கப்பட்டன. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில் அவர்களின் அமைச்சுப் பதவிகள் பறிக்கப்பட்டன.

கடந்த வாரம் இடம் பெற்ற புதிய அமைச்சரவையின் மாற்றத்தின் பின் சிறிலங்கா சுதந்திரக்கட்சியிடையே ஏற்பட்ட உட்கட்சிப்பூசல் முற்றிய நிலையில் அவர்களின் பதவிகள் பறிக்கப்பட்டுள்ளன. (04 ஆம் பக்கம் பார்க்க)



## பதவி பறிக்கப்பட்ட அமைச்சர்கள் ரணிலுடன் இரகசியமாகச் சந்திப்பு?

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அமைச்சுப் பதவி பறிக்கப்பட்ட அமைச்சர்கள் மூவரும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை இரகசியமாக நேற்றிரவு சந்தித்து கலந்துரையாடியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

நேற்றிரவு தம்புள்ளயிலுள்ள அமயாலேக் ஹோட்டலில் இச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது. பதவி பறிக்கப்பட்ட அமைச்சர்களான அநுரா பண்டாரநாயக்க ,மங்கள் சமரவீர மற்றும் சிறிபதி சூரியாராட்சி ஆகியோர் ரணில் விக்கிரமசிங்காவை சந்தித்து கலந்து துரையாடுவதற்காக அங்கு செல்ல தயாராக இருந்ததாக நேற்று மாலை கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. புதிய கூட்டுக்கட்சி ஒன்றை உருவாக்கி அரசுக்கு எதிராக செயற்படு வதற்கு அவர்கள் திட்டம் தீட்டியுள்ளதாகவும் நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ச)

## ஊரெழுவில் கிளைமோர்த் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

ஊரெழு பகுதியில் நேற்று முன்தினமிரவு இடம் பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் இராணுவ பஸ் ஒன்று சேதமடைந்துள்ளது. பலாலி வீதியில் உள்ள ஊரெழு இராணுவ முகாமிற்கு சற்றுத் தொலைவில் நேற்று முன்தினமிரவு 10.30 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

இத் தாக்குதலில் சேதமடைந்திருந்த பஸ் படையினரால் ஊரெழு படைத்தளத்திற்குள் கொண்டு செல்லப்பட்டுள்ளது. எனினும் இத் தாக்குதலில் ஏற்பட்ட சேத விபரங்கள் எவையும் தெரியவரவில்லை. (எ-1)

## அமைச்சுப் பதவி பறிக்கப்பட்டமை தனிப்பட்ட ரீதியில் மகிழ்ச்சியாகவுள்ளது

### அநுரா பண்டாரநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

தனது அமைச்சரவை பறிக்கப்பட்டமைக்கு தனிப்பட்ட முறையில் தான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். ஏனென்றால் இவர்களுடன் இணைந்து தன்னால் பணியாற்ற முடியாது என ஜனாதிபதியினால் திடீரென அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்ட அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

அமைச்சுப் பதவி பறிக்கப்பட்டமை குறித்து பி.பி.ஸிக்கு அவர் தெரிவித்ததாவது, மகிந்த அரசி டம் இனப் (04 ஆம் பக்கம் பார்க்க)

## அனைத்துக்கட்சி மாநாட்டை புறக்கணிக்க ஐ.தே.க.முடிபு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை ஏற்படுத்துவதற்கு என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அமைக்கப்பட்ட அனைத்துக் கட்சி குழுக்கூட்டத்தை புறக்கணிக்கப்போவதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி அறிவித்துள்ளது.

நேற்று ஐ.தே.கவின் தலைமைச் செயலகமான சிறிகோத்தாவில் நடைபெற்ற செயற்குழுக்கூட்டத்தில் இந்த முடிபு எடுக்கப்பட்டது. இது தொடர்பாக ஐ.தே.கவின் பேச்சாளர் கஜந்த கருணாதிலகா தெரிவித்ததாவது;

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மகிந்த மீறும் போது நாம் அனைத்துக் கட்சிக்கூட்டத்தில் பங்குபற்றுவதில் அர்த்தமில்லை.

அரசுடன் ஐ.தே.க.செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் நாட்டின் தேசிய பிரச்சினையை (04 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டுவில் பகுதியில் நேற்று குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் முசிறி கள்ளுத்தவறணைக்கு அருகில் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் நேற்றுக் காலை 10 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இச் சம்பவத்தில் மட்டுவில் சந்திபுரத்தைச் சேர்ந்த இராசரட்ணம் புஷ்பராசா (வயது 30) என்ற குடும்பஸ்தரே கொல்லப்பட்டவராவார்.

வெளிநாடு ஒன்றில் பணிபுரிந்து விட்டு அண்மையில் தான் அவர் ஊர் திரும்பினார் எனவும் வீட்டிலிருந்து 35 ஆயிரம் ரூபா பணத்துடன் ஒருவரைச் சந்திக்க சென்றார் எனவும் விசாரணைகளில் உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.

எனினும் குறித்த குடும்பஸ்தரின் சடலத்திலோ அல்லது (04 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வையே வழங்குவேன்

### ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

அமைதியை சமாதானத்தை அடைவதற்கு விடுதலைப்புலிகள் தமது ஆயுதங்களை கைவிட்டு பேச்சுவார்த்தைகளுக்கு முன்வர வேண்டும். இந்தப் பிரச்சினைகளுக்கு இராணுவத் தீர்வு என்பது கிடையாது. அரசியல் தீர்விலேயே நம்பிக்கை வைத்திருக்கிறேன்.

ஆகவே அவர்களுக்கு அரசியல் தீர்வைத் தான் வழங்குவேன். இதனை முடிபு செய்ய வேண்டியது விடுதலைப்புலிகள் தான் என்றார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ.லண்டன் பி.பி.ஸிக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் எனது சிந்தனையினை ஏற்றுக் கொண்டு ஆயுதங்களைக் கைவிட்டு எம்மிடம் சமரசத்திற்கு முன்வர வேண்டும்.

அவர்கள் எம்மைத் தாக்காவிட்டால்;அவர்கள் எவரையும் கொலைசெய்யாவிட்டால் எல்லாம் சரி. (04 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியாவில் தாக்குதல் நான்கு பேர் படுகாயம்

(வவுனியா)

வவுனியாப் பொலிஸ் பிரிவில் நேற்று இடம்பெற்ற வெவ்வேறு சம்பவங்களில் இரு இராணுவத்தினர் உட்பட 4 பேர் காயமடைந்துள்ளனர்.

வவுனியா மன்னார் வீதி நெலுக்குளம் பகுதியில் காலை 9 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பொதுமக்கள் இருவர் காயமடைந்துள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நண்பகல் கூமாங்குளம் சந்தியில் சிவில் உடையில் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது அவர்கள் இருவரும் காயமடைந்துள்ளதாகவும் அவர்கள் வவுனியா இராணுவ வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (ச-3)

# யாழிலிருந்து 60 தபால் பொதிகள் நேற்றுக் காலை அனுப்பி வைப்பு

யாழ்.குடாநாட்டிலிருந்து வெளிநாடுகள் மற்றும் வெளிமாவட்டங்களுக்கான 60 தபால் பொதிகள் நேற்றுக் காலை தெல்லிப்பழையில் வைத்து சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கையளித்துள்ளதாக யாழ்.பிரதம தபால்மா அதிபர் எஸ்.குமரகுரு தெரிவித்துள்ளார்.

இப் பொதிகளில் கடந்த ஜனவரி மூன்றாம் திகதியிலிருந்து நேற்று முன்தினம் வரையாகச் சேகரிக்கப்பட்ட தபால்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

இவற்றுடன் கடந்த காலங்களில் தபால் பொதிகள் எடுத்து வரப்பட்ட சுமாராக 6 ஆயிரம் தபால் வெற்றுப் பைகள் அடங்கிய 30 தபால் பொதிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை குடாநாட்டுக்கான 50 ஆயிரத்திற்கும் அதிகமான பொதிகள் ஒரு மாதகாலத்திற்கு மேலாக வெளிமாவட்டங்களிலுள்ள தபால் நிலையங்களில் தேங்கிக் கிடப்பதாகவும் திருகோணமலை தபால் நிலையத்தில் மாத்திரம் 35 ஆயிரம் பொதிகள் தேங்கிக் கிடப்பதுடன் பொதிகளை அனுப்புவோரின் எண்ணிக்கை குறைவடைந்து வருவதாகவும் அவர் மேலும் கூறினார். (ச-3)

# சு.கவின் அதிகாரப் பகிர்வு தீர்வுத் திட்டம் இரண்டு வாரங்களில் முன்வைக்கப்படும்

## கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவிப்பு

இலங்கையில் நிலவி வரும் தேசிய இனப் பிரச்சினைக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தீர்வுத் திட்டமாக, பிளவுபடாத நாட்டுக்குள் உச்ச கட்ட அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டம் இன்னும் இரண்டு வாரங்களில் முன்வைக்கப்படும் என கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்வுத் திட்டத்தின் மூலம் நாட்டின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என நம்புவதாகவும் அவர் தெரிவித்தார். அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இத் தகவலை வெளியிட்டார்.

அமைச்சர்களான டிலான் பெரேரா, நிமல் சிறிபால டி சில்வா, சுசில் பிறேம் ஜெயந்த, அநுர பிரியதர்ஷன யாப்பா ஆகியோர் கலந்து கொண்ட இந்தச் செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது,

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள் 18 பேர் எம்முடன் இணைந்து கொண்டனர் என்பதைக் காரணம் காட்டி சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையை ஐக்கிய தேசியக் கட்சி கிழித்தெறிந்தது.

ஆனால் பொதுமக்களையும் படை வீரர்களையும் பலியெடுத்து பல கோடிச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்துக் கொண்டிருக்கும் புலிகளுடன் ஐக்கிய தேசியக் கட்சி செய்து கொண்ட ஒப்பந்தத்தை அக் கட்சி கிழித்தெறிந்ததா?

இன்று வரைக்கும் சுமார் 6 ஆயிரம் தடவைகளுக்கு மேல் அவ் ஒப்பந்தத்தை புலிகள் மீறியுள்ளனர். ஆனால் இவை எல்லாம் நடந்து வருகின்ற போதிலும் அது பரவாயில்லை எனக் கூறி அவ் ஒப்பந்தத்தை அவர்கள் பாதுகாத்தனர்.

ஆனால் இன்று தமது கட்சி உறுப்பினர்கள் 18 பேர் எம்முடன் இணைந்து கொண்டுள்ளனர் எனக் கூறி எம்முடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தைக் கிழித்துள்ளனர்.

காலியில் பேசிய அக் கட்சியின் உறுப்பினர் வயிர அபயவர்த்தன, எதிர்வரும் தமிழ், சிங்களப் புத்தாண்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கம் வழங்கும் 'கிரிபத்' கிடைக்கும் என்றார்.

எம்முடன் இரண்டு வருடத்திற்குத் தேர்தல் ஒன்றைப் பற்றிப் பேச மாட்டோம் என்று ஒப்பந்தத்தில் கூறிவிட்டு தமது கட்சியை பலப்படுத்தி எம்மை வீழ்த்த அவர்கள் திட்டம் போட்டனர் என்றார். (ச-5)

# புற்று நோயாளர்களுக்கு பால்மா வழங்கல்

அகில இலங்கை இந்துமா மன்றத்தினால் புற்றுநோயாளர்களுக்கு சஸ்ரஜின் பால்மா இன்று காலை 8.30 மணிக்கு கோண்டாவில் சிவபூமி பாடசாலையில் இலவசமாக வழங்கப்படவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் புற்றுநோயாளர் பிரிவில் தங்கிச் சிகிச்சை பெறும் 150 புற்றுநோயாளர்களுக்கு இப் பால்மா வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வைத்திய நிபுணர் ஜெயக்குமாரின் மருத்துவச் சான்றிதழ் பெற்றுள்ள நோயாளர்களுக்கு மட்டும் இப்பால்மா வழங்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது. (ச-3)

# பரீட்சைப் பெறுபேறு இணையத்தளத்தில்

(யாழ்ப்பாணம்)

பேராதனைப்பல்கலைக்கழக வெளிவாரி கலைப் பட்டதாரிகளுக்கான 2005 ஆம் ஆண்டுக்குரிய பரீட்சை முடிவுகள் வெளிவந்துள்ளன.

இம் முடிவுகளை சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகள் WWW.pdn.ac.lk extex.com என்னும் இணையத் தளத்தில் பார்வையிடலாம் என யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (ச)

# பண்ணைப் பாலத்தில் லொறி குடைசாய்ந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து பொருள்களை ஏற்றிச் சென்ற லொறி ஒன்று பண்ணைப் பாலத்தில் குடை சாய்ந்தது.

லொறி குடை சாய்ந்த போது அதன் சாரதியும் நடத்துநரும் கடற்படையினரால் காப்பாற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

லொறி குடைசாய்ந்து கடலிலுள் பாய்ந்ததால் பொருள்கள் நீரில் மூழ்கிப் போயுள்ளதாகக் கூறப்படுகின்றது. (ச-3)

# புதிய நிர்வாக சபை

ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் நிர்வாக சபைப் பொதுக் கூட்டம் கோவில் கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது.

இதன் புதிய தலைவராக தி.ரவீந்திரநாதனும் செயலாளராக தி.லெட்சுமிகாந்தனும் பொருளாளராக த.இரத்தினசிங்கமும் இத்துடன் 12 நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு அன்றே நிர்வாகசபைக் கூட்டமும் இடம்பெற்றது. (ச-127)

# பிரபாகரன் நாட்டைவிட்டு செல்வதற்கு தயாராகவிருப்பதாக அறிகின்றோம்

## அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவிப்பு



(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் நாட்டை விட்டு வெளியேறத் தயாராகவிருப்பதாக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

ஸ்ரீதலதா மாளிகைக்கு விஜயம் செய்த அமைச்சர் ரம்புக்வெல மல்வத்த மகாநாயக்க தேரரையும் திப்பட்டுவாவே சித்தார்த்த ஸ்ரீ சுமங்கல தேரரையும்மற்றும் அஸ்கிரிய பௌத்த பீடாதிபதிகளையும் சந்தித்து நல்லாசி பெற்றுக் கொண்ட வேளையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.அமைச்சர் மேலும் அங்கு கூறியதாவது;

தமிழ் மக்களை அதலபாதாளத்திற்குள் தள்ளிவிட்டு பிரபாகரன் நாட்டை விட்டு செல்லவிருப்பதாகப் பாதுகாப்புத்துறையினரின் புலனாய்வு மூலம் அறிய முடிகின்றது.

புலிகளுடன் தொடர்பு கொண்டு பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்ட மூன்று சிங்களவர்களை இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

அவர்களிடமிருந்து பெருந்தொகை ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. பொது மக்களைப் படையினர் கைது செய்வதில்லை. தேசத்துரோக செயலில் ஈடுபட்டால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.அரசாங்கம் தற்போது பலம் பெற்றுள்ளது. வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்கு மிக விரைவில் தீர்வு காண்போம் என்றார். (ச-5)

# மாணவர்களுக்கு சவர்க்காரம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயத்தில் சங்கானைக் கோட்டக் கல்விக்குட்பட்ட 31 பாடசாலைகளை சேர்ந்த 9 ஆயிரத்து 500 மாணவர்களுக்கு நேற்றுச் சவர்க்காரம் விநியோகிக்கப்பட்டது.

கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளினால் தமக்குத் தேவையான விபரங்கள் சங்கானைப் பிரதேச செயலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுச் சங்கானைப் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட லக்ஸ் மற்றும் சன்லைட் சவர்க்காரங்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. (ச-3)

# 130 கோடி மக்கள் வாழும் சீனாவில் 27 அமைச்சர்கள் மட்டுமே உள்ளனர்

## ஜே.வி.பி. சுட்டிக்காட்டு

(கொழும்பு)

மக்கள் சீனக் குடியரசில் 130 கோடி மக்கள் வாழ்கின்ற போதிலும் அந்த நாட்டில் 27 அமைச்சர்களே இருக்கின்றனர். இதனை எமது அரசாங்கம் உதாரணமாகக் கொள்ள வேண்டும் என்று ஜே.வி.பியின் விஜிதகேரத் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நட்புறவின் 50 வருட கால நிறைவை முன்னிட்டுப் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட பிரேரணையில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது,

சீனாவில் 130 கோடி மக்கள் வாழ்கின்றனர். ஆனால் அங்குள்ள அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கை 27 ஆகும். ஆனால் எமது நாட்டில் அமைச்சர்களின் எண்ணிக்கை 107 ஆகவுள்ளது.

இன்றைய நிலைமையில் மக்கள் சீனக் குடியரசு நவீன உலகமாற்றங்களுக்கு ஏற்ப அபிவிருத்தியடைந்து வருகின்றது. அந்த நாட்டுடனான எமது கலை, கலாசார, சமூக பொருளாதார உறவுகள் பலப்படுத்தப்பட வேண்டும்.

மக்கள் சீனக் குடியரசின் இலங்கைக்கான தூதரகம் கொழும்பில் உள்ளது. ஆனால் இலங்கையின் உள் விவகாரங்களில் சீனா ஒருபோதும் தலையிட்டதில்லை.

ஆனால் சில நாடுகள், சில நாடுகளின் உள் விவகாரங்களைக் கேந்திரமாகக் கொண்டு தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்கின்றன.

எமது நண்பர்கள் போன்று வருகின்ற எதிரிகள் யார் என்பதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என விஜிதகேரத் எம்.பி. மேலும் தெரிவித்துள்ளார். (எ-1)


## சிறு விளம்பரங்கள்

### தவறிவிட்டது

கலைமதி வீதி, புத்தூர் மேற்கு என்னும் விலாசத்தில் வசிக்கும் குணரத்தினம் மகாதேவன் ஆகிய எனது இராணுவத்தினரால் வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள் அனுமதிப் பத்திரம் புத்தூர் மேற்கு, கலைமதி வீதி, புத்தூர் வடக்கு,மருதடி, சுன்னாகம் வீதி, புத்தூர் வடக்கு, ஏரந்தனை ,மஞ்சோணர் வைரவர் வீதி, நவக்கிரி இராசவீதி தொழிற்பேட்டைப் பகுதியில் தவறிவிட்டது.கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நேரில் சிறிசியான் வீடியோ சென்ரர் கலைமதி வீதி, புத்தூர் மேற்கு என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். அல்லது 077 6911089 என்ற கைத் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்கவும். கண்டெடுத்து ஒப்படைப்போருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். -குணரத்தினம் மகாதேவன். (615)

★ ★ ★ ★

### கணினி (Computer) விற்பனைக்குண்டு

புதிய IBM கணினி (Computer) PENTIUM-4, LCD MONITOR, SCANNER, PRINTER, DVD ROM, WEB, CAMERA ஆகியவற்றுடன் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு A.G.செல்வம், 107, டேவிற் வீதி, யாழ்ப்பாணம். (616)

சிங்காசனம் என்பது ஒரு பாம்புப் புற்று. அதன்மீது அமர்வோரை எந்தநேரத்திலும் புற்றிலிருந்து கிளம்பும் பாம்பு தன் விஷப் பற்களால் கடித்துக் கொல்லும்.

—அறிஞர் அண்ணா

வலம்புரி

# தென்னிலங்கை அரசியல் குழப்பம் பொதுத் தேர்தலுக்கு வழிதேடும்

நாட்டில் யுத்தத்தோடு அரசியல் குழப்பமும் சேர்ந்து கொண்டுள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காய் நகர்த்தல்களால் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சிக்குத் தாவிய கையோடு குழப்பம் உக்கிரம் பெற்றதெனலாம்.

ஆளும் தரப்பின் பலத்தை வலுப்படுத்துவதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட அரசியல் சூழ்ச்சியால் கட்சிகளின் ஒற்றுமை, கட்டுப்பாடு நிர்மூலமாகிவிட்டது என்ற கருத்து தென்னிலங்கையில் நிலவுகின்றது.

அதேநேரம் ஜனாதிபதி மகிந்தவின் அரசியல் ராஜதந்திரமே அரசியல் கட்சிகளிடையே ஏற்பட்ட குழப்பத்திற்கு காரணம் என முற்றுமுழுதாகக் கூறி விட முடியாது.

தமது கட்சியை விட்டு கட்சிதாவுகின்றவர்களுக்கு மதி என்ன என்ற கேள்வியும் எழவே செய்கின்றது. எதுவாயினும், மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் தென்னிலங்கையில் அரசியல் குழப்பம் ஏற்பட்டுள்ளது என்பதை மறுப்பதற்கு இல்லை.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் பொது இணக்கப்பாடு கண்ட பின்னர் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை தம் பக்கம் இழுத்தமை அரசியல் நாகரிகம் அல்ல என்பது பொதுவான கருத்து.

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமாக இருக்கக் கூடிய ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பொது இணக்கப்பாட்டிற்கு இணங்கிக் கொண்ட பின்னர் அந்தக் கட்சியின் உறுப்பினர்களை தன் பக்கம் இழுத்து அமைச்சுப் பதவிகளை வழங்கியமை ஜனாதிபதி மகிந்தவின் 'ஏமாற்றுச் செயல்' என்றவாறு விமர்சிக்க வைத்துவிட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நடைமுறைகளில் திருப்தியில்லாதவர்களே ஆளும் தரப்பில் இணைந்து கொண்டனர் எனக் கூறினாலும் அமைச்சுப் பதவிகளை வழங்குவதாக ஆசை காட்டாவிட்டால் அவர்கள் அரசுடன் இணைவார்களா? என்ற கேள்வி முன்னெழுவதும் நியாயமானதே.

ஆக, இப்போது தென்னிலங்கை அரசியல் குழப்பம் அடைந்து விட்டது என்பது மட்டும் உண்மை. இக் குழப்பத்தினால் நாட்டின் சிக்கல் நிலை மேலும் விரிவடையும் என்பதே உண்மை.

அதேநேரம் எதிர்க் கட்சிகளின் ஆதரவை அரசு எந்த நேரத்திலும் பெற முடியாது போகும். குறிப்பாக சமாதான முயற்சிகளில் எதிர்க் கட்சிகளின் ஆதரவு, ஒத்துழைப்பு என்பதை இம்மியும் எதிர்பார்க்க முடியாது.

அப்படியானால், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூட்டியுள்ள சர்வகட்சி மாநாட்டில் எந்தத் தீர்வை எடுத்தாலும் அதன் அரங்கேற்றம் இடம்பெறுவது முடியாத காரியமே.

அரச தரப்பு எதிர்க் கட்சிகளிடையே குழப்பத்தை ஏற்படுத்திவிடும் போது அதற்குப் பதிலாக எதிர்க் கட்சிகளும் அரசுக்கு எதிராக குழப்பம் விளைவிக்கவே முற்படும்.

அத்தகையதோர் குழப்பத்திற்கான ஏற்பாட்டில் எதிர்க் கட்சிகள் ஒன்றிணைவது தவிர்க்க முடியாததே. அதற்கான ஏற்பாடுகள் தென்னிலங்கை அரசியலில் தென்படுவதை அவதானிக்க முடிகிறது.

ஆக, அரசின் பலத்தை வலுப்படுத்துவதாக நினைத்து உள்ளதையும் கெடுத்துவிட்ட கதையாகவே எல்லாம் முடியப் போகின்றது.

இதற்கெல்லாம் தீர்வாக பொதுமக்களை நாடும் தேர்தலை நடாத்துவதே இறுதி முடிபாகும்.

# பொலிஸாருக்கு எதிரான முறைப்பாடுகளை மக்கள் வழங்குவதற்கு அலுவலகங்கள்

## தேசிய பொலிஸ் ஆணைக்குழு ஏற்பாடு

பொலிஸாருக்கு எதிரான முறைப்பாடுகளை மக்கள் வழங்குவதற்கு 9 மாகாண அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகத் தேசியப் பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் நெவில் பியதிகம தெரிவித்துள்ளார். ஆணைக்குழுவில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த அலுவல்களுக்குப் பொறுப்பாக பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். கொழும்பு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவை தலைமையகமாகக் கொண்டு இந்த அலுவலகங்கள் இயங்கவுள்ளன.


இந்த அலுவலகத்தில் கொழும்பு, களுத்துறை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்குவதாக அமையும். இதற்கு மேலதிகமாக கம்பஹா, சீதாவாக்கை, குருநாகல், பதுளை, அநுராதபுரம், மாத்தறை , காலி, கண்டி ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு மக்கள் தமது முறைப்பாடுகளை முறையே 0112 395971, 071 2707050, 077 7106198, 037 222 0243, 055 222 5625, 060 285 3003, 041 222 0715, 091 222 6750, 081 220 3596 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அறிவிக்க முடியும் எனவும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதனடிப்படையில் பொலிஸ் அதிகாரி ஒருவருக்கோ அல்லது பொலிஸ் சேவைக்கு எதிராகவோ மக்களோ அதிருப்தியடையும் ஒருவரோ தமது முறைப்பாடுகளை எழுத்து மூலமாகவோ, நேரிலோ, கடிதமூலமோ இந்தத் தேசியப் பொலிஸ் ஆணைக்குழு அலுவலகத்தின் கிளை அலுவலகங்களுக்கு அறிவிக்கலாம்.

இந்த முறைப்பாடுகள் முறையே பாரதூரமானவை, சிறு முறைப்பாடுகள் மற்றும் பாரதூரமற்றவை என மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த முறைப்பாடுகள் தொடர்பாக தேசியப் பொலிஸ் ஆணைக்குழு முறைமையான விசாரணைகளை மேற்கொள்ளும்.

அத்துடன் இதற்கென பொலிஸ் ஆணைக்குழுவின் கீழ் நேரடியாக இயங்கும் பொலிஸ் அதிகாரிகளைக் கொண்ட தனியாக இயங்கும் பிரிவொன்றும் ஏற்படுத்தப்படவுள்ளதுடன் பொலிஸ்மா அதிபரிடம் இதற்கு தகுதியுடைய அதிகாரிகளின் பெயர்களை அனுப்புமாறு கோரியுள்ளதாகவும் இரகசியப் பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார். இவர்கள் நேர்முகத் தேர்வின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் எனவும் அவர் கூறினார். (ச-5)

# மனித உரிமை மீறல்களை ஆராய விசேட குழு நியமிக்க வேண்டும்



## ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை

(கொழும்பு)

மனித உரிமை மீறல்கள் குறித்து ஆராய்வதற்குப் பாராளுமன்றத்தில் ஸ்திரமான செயற்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டுமென எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுப் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

படுகொலை செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டிற்குள் ஆயுத முரண்பாடு ஒன்று இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற போதிலும் சட்டம் அமைதியாக இருக்கின்றது. எனவே நாட்டிற்குள் இடம்பெறும் அனைத்து மனித உரிமை மீறல்கள் குறித்தும் ஆராய்வதற்கு செயற்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும்.

இதற்கு அரசாங்கத்தின் ஆதரவு கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். (ச-3)

# கட்சியைத் துண்டாடுவதற்கு இடமளியேன் உரிய நேரத்தில் மகிந்தவாக இருப்பேன்

## நான் சிறிமாவோ, சந்திரிகாவோ இல்லை என்கின்றார் ஜனாதிபதி

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை துண்டாடுவதற்கான சதித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கட்சியைத் துண்டாடுவதற்கு நான் ஒருபோதும் இடமளிக்கமாட்டேன். கட்சியிலிருந்து யார் வெளியேறினாலும் மக்கள் வெளியேற மாட்டார்கள். கட்சியைக் கட்டிக் காப்பதற்காக நான் எனக்குத் தேவையான நேரத்தில் மகிந்த ராஜபக்ஷவாக இருப்பேன் என்று கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மேற்கிற்கான தொகுதியின் புதிய அமைப்பாளர்களுக்கான நியமனக் கடிதத்தையும் ஏனைய பிரதேச அமைப்பாளர்கள் 27 பேருக்கான நியமனக் கடிதங்களை வழங்கி வைத்துவிட்டு அங்கு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த வைபவம் அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

கட்சியை விட்டு ஓடுவதைவிட கட்சிக்குள் இருந்து கொண்டு கட்சியை நாசப்படுத்துவதற்காகத் திட்டங்களைத் தீட்டுவது அதனைவிட பயங்கரமானது. கட்சிக்குள் இருந்து கொண்டு சதித்திட்டம் தீட்டிக் கட்சியைத் துண்டுதுண்டாக உடைத்துக் குழு அமைத்தவர்களின் முடிபுகள் பற்றி நாம் ஏற்கனவே கண்டுள்ளோம்.

கட்சியைத் துண்டாடுவதற்குக் குழு அமைத்தவர்களின் இறுதிப் பெறுபேறுகள் குறித்து வரலாற்றில் கண்டுள்ளோம். கட்சி முடிபுகளுக்கு எதிராக முடிபுகளை எடுக்கின்றவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நான் ஒருபோதும் பின்நிற்கமாட்டேன்.

நான் சிறிமாவோ, சந்திரிகாவோ இல்லை. அவர்களுக்கு இடைப்பட்டவன் என்பதால் எனக்குத் தேவையான நேரத்தில் நான் மகிந்தவாக இருப்பேன். இன்று கட்சியமைப்பாளர்களாக நியமனம் பெற்றவர்கள் தனிப்பட்ட தேவைகளைவிட கட்சியை சக்திப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு எனக்குப் பின் தலைவராக சாதாரண ஒருவர் வரக் கூடிய வகையில் பாதை ஒன்றை அமைப்பேன். பண்டாரநாயக்க, சிறிமா கட்சியை சக்திபடைக்க நடவடிக்கை எடுத்தனர்.

அவர்களுக்கு ஏற்பட்டது போன்று எனக்கும் பல்வேறு சந்தர்ப்பங்களில் இடையூறுகள் விளைவிக்கப்படுகின்றன. இதன்மூலம் கட்சியை அழிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கட்சியை அழிக்க யாராவது முற்பட்டால் அதற்கு ஒரு போதும் இடமளிக்க மாட்டேன். (ச-5)

# மட்டக்களப்பில் மீனவர் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சந்திவெளிப் பகுதியில் இனந்தெரியாத ஆயுததாரிகளால் நேற்று முன்தினமிரவு 8.30 மணியளவில் மீனவர் ஒருவர் கடத்தப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர் மயில்வாகனம் ரவிச்சந்திரன் (வயது-33) என இனங்காணப்பட்டுள்ளார். இவர் சுட்டுக் கொல்லப்பட்ட இந்துப் பூசகரின் அயலவர் என மேலும் அறியப்பட்டுள்ளது.

இவரது சடலம் ஏறாவூர் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-5)

# நினைவு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஈழத்தின் பிரபல இசை நாடகக் கலைஞர் வடிவேலு செல்வரத்தினத்தை நினைவு கூரும் நிகழ்வு இன்று மாலை 3.30 மணிக்கு மன்றக் கலைத்தூது மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நா.விமலநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் ஆரம்ப உரையினை யோ.ஜோன்சன் ராஜ்குமார் நிகழ்த்துவார். ஓருடலில் வதியும் ஈருடல்கள் –வடிவேல் செல்வரத்தினம் என்னும் பொருளில் கருத்துரையினை பாக்கியநாதன் அகிலனும் எனது நாடக வாழ்க்கையில்– செல்வரத்தினம் என்னும் பொருளில் கருத்துரையினை ம.தைரியநாதனும் இசை நாடகச் செல்வம் என்னும் பொருளில் கருத்துரையினை த.றொபேட்டும் நான் கண்ட செல்வரத்தினம் என்னும் பொருளில் கருத்துரையினை தை.யஸ்ரினும் வழங்கவுள்ளனர். (ச-3)

# அமெரிக்க எம்.பிக்களின் கோரிக்கை குறித்து அரசு கவலைப்படவில்லை

## அமைச்சர் பிரியதர்சன யாப்பா தெரிவிப்பு

அமெரிக்காவின் காங்கிரஸ் சபை உறுப் பினர்கள் 38 பேர் இணைந்து இலங்கைக்கு அமெரிக்காவின் சார்பில் ஒரு விசேட தூது வரை நியமிக்குமாறு அமெரிக்க ஜனாதிபதி யிடம் கடந்த செவ்வாய்க்கிழமை விடுத்த வேண்டுகோள் குறித்து இலங்கை அரசாங் கம் கவலைப்படவில்லை என ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரி வித்தார்.

வாராந்த அமைச்சரவைத் தீர்மானங்க ளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட் டில் கலந்து கொண்டு பேசும்போதே அமைச் சர் இக்கருத்தை தெரிவித்தார். அமெரிக்கா வின் சட்டவாக்கற் சபையான காங்கிரஸ் சபை உறுப்பினர்கள் 38 பேர் இணைந்து இலங்கையில் அண்மைக்காலமாக இடம் பெற்றுவரும் வன்முறைகள் தம்மைத் துயரத் தில் ஆழ்த்தியுள்ளதால் இலங்கையின் சமா தான முயற்சிகளில் ஈடுபட அமெரிக்கா விசேட தூதுவர் ஒருவரை அனுப்பவேண்டு மெனக் கோரியிருந்தனர்.

இந்தக் கோரிக்கை குறித்து இலங்கை அரசாங்கம் பெரிதாக அலட்டிக்கொள்ள வில்லை என அமைச்சர் தெரிவித்தார். இதே மாதிரியான கோரிக்கைகள் முன்னரும் பல முறை காங்கிரஸ் பிரதிநிதிகளால் முன்வைக் கப்பட்டிருந்தன.

ஆயினும் அமெரிக்க அரசாங்கம் தொடர்ந்தும் எமது அரசாங்கத்திற்கு தமது ஆதரவை அளிக்குமென நாம் உறுதியாக நம்புகிறோம். இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் இலங்கையின் ஒருமைப்பாட்டை பாதுகாப்பதற்கான தமது ஒத்துழைப்பை வழங்க தமது பரிபூரண ஆதரவை பல தடவை பகிரங்கமாகவே அறிவித்திருந்தனர்.

ஆகவே அமெரிக்க அரசு எமக்கு தனது ஆதரவை தொடர்ந்தும் வழங்கும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. (ச-5)

# பாடநூல் ஆக்க நிபுணத்துவக் குழுவிற்கு விண்ணப்பிக்க முடியாத நிலையில்

(யாழ்ப்பாணம்)

பாடநூல் ஆக்க நிபுணத்துவக்குழுவில் இணைந்து கொள்வதற்கு யாழ்.மாவட்டத் தைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் உரிய முறையில் விண்ணப்பிக்க முடியவில்லை என கவலை தெரிவிக்கப்படுகின்றது.

பாடநூல் ஆக்க நிபுணத்துவக்குழுவில் ஆட்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவமும் அது தொடர்பான விபரமும் ஜனவரி மாதம் 26 ஆம் திகதி வெளியிடப்பட்டு பெப்பிரவரி 10 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் விண்ணப்பிக்கு மாறு கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணை யாளர் நாயகத்தினால் கோரப்பட்டிருந்தது.

சம காலத்தில் நிலவி வரும் போக்கு வரத்துச் சிரமங்கள், தபால் போக்கு வரத்தில் காணப்படும் தாமதம் மற்றும் கொழும்பில் இருந்து வெளிவரும் பத்திரிகைகள் மற்றும் வர்த்தமானி என்பன யாழ்.மாவட்டத்திற்கு உரிய காலப் பகுதியில் வந்து சேராமை என் பன காரணமாக யாழ்.மாவட்டத்தில் இருப்ப வர்கள் தகுதியானவர்கள் உரிய வேளையில் விண்ணப்பிக்க முடியவில்லை.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பலர் விண் ணப்பிப்பதற்கு எதிர்பார்த்திருந்தபோதும் விண்ணப்பம் தொடர்பான தகவல்கள் உரிய முறையில் கிடைக்காமையினால் தமது விண்ணப்பத்தை உரிய காலத்திற்குள் அனுப்பிவைக்க முடியவில்லை என விசனம் தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

# பூமிக்கு அருகில் இன்று சனிக்கிரகம் தென்படும்

(சென்னை)

சனிக்கிரகம் பூமியை நெருங்கும் அரிய நிகழ்வொன்று இன்று 10 ஆம் திகதி நடை பெறவுள்ளது. இதன்போது பூமிக்கு அருகில் இக் கிரகம் தென்படும் என்றும் இதனை வெறும் கண்களினால் பார்க்க முடியும் என் றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

சனிக்கிரகம் சூரியனையும் பூமியையும் நீள்வட்டப்பாதையில் சுற்றி வருகிறது. இக் கிரகத்திற்கும் பூமிக்குமிடையிலான தூரம் 157 கோடி கிலோ மீற்றர் ஆகும்.

இந் நிலையில் 378 நாட்களுக்கு ஒரு தடவை சனிக்கிரகம் பூமிக்கு அருகில் வரும். அப்போது பூமியில் இருந்து இக் கிரகத்தை பார்க்கலாம். இந்த அதிசய நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

சூரியனைச் சுற்றிக்கொண்டிருக்கும் இக் கிரகம் இன்று சூரியனில் இருந்து 180 டிகிரி கோணத்தில் தென்படும்.

சூரியன் மறைந்தவுடன் கிழக்கு வானில் சனிக்கிரகம் தோன்றும். அதன் உருவம் மிகப்பெரிதாகவும் வெளிச்சமாகவும் தோன் றும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இந்த அரிய நிகழ்ச்சியின் போது பூமிக்கும் சூரி யனுக்கும் இடையே உள்ள தூரம் 122 கோடியே 70 இலட்சம் கிலோ மீற்றராகக் காணப்படும்.

வான் வெளியில் உள்ள ஏனைய கிரகங் களைப் போல் அல்லாமல் சனிக்கிரகம் நிறைய வளையங்களைக் கொண்ட அதிசய கிரகமாகும். இன்று இந்த வளையங்களும் மிகவும் தெளிவாகத் தென்படும் என்று தெரி விக்கப்படுகின்றது.

எனினும் நாளை 11 ஆம் திகதி சூரிய உத யத்தின்போது இக் கிரகம் தொலைவிற்குச் சென்று விடும் என்றும் விஞ்ஞானிகள் தெரி விக்கின்றனர். (ச-5)

## அமைச்சுப் பதவி...

பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவருக்கு ஈடுபாடும் கிடையாது. இவற்றை விட வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு அவ ரிடம் எந்தவிதமான தீர்வும் கிடையாது.

வேலையில்லாப் பிரச்சினை ,ஊழல் மோசடிகளும் ,கடத்தப்படுவது,கொலை செய் யப்படுவது என்பவற்றுக்கும் எந்தவிதமான தீர்வும்கிடையாது. நாடு மொத்தத்தில் குழம்பிப் போய்க் கிடக்கிறது.

தனக்கு இவற்றில் எந்தவித பங்கும் கிடை யாது. ஆகவே நாட்டு மக்களுக்கு இவற்றுக் காக தான் பதில் செல்லவேண்டியதில்லை. மிகவும் கடுமையான பிரச்சினைகளுக்கு மத்தியில் அவருடைய அமைச்சரவையில் இருந்திருக்கிறேன். இது எனது தந்தையின் உடையகட்சி, அவரது தந்தையின் கட்சி யல்ல. இதனை விட்டு தாம் வெளியேறப் போவ தில்லை எனவும் அவர் மேலும் கூறினார்.

தொடர்ந்தும் ஜனநாயகத்திற்காக இனப் பிரச்சினைத் தீர்வுக்காக அனைத்து மக்க ளின் சமத்துவத்திற்காக போராடுவோம். இவர் களுடைய சக்திகள் அனைத்தையும் ஒன்றி ணைத்து போராடுவோம் என அவர் தெரி வித்தார். சந்திரிகா குமாரதுங்கவையும் தலைமை தாங்குமாறு கேட்டோம் என அமைச் சர் அநு ரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.(ச-3)

## பல்கலைக்கழக கல்வி...

செய்யப்பட்டுள்ளது. குடா நாட்டில் குறிப்பிட்ட சில பகுதிகளைத் தவிர்ந்த ஏனைய இடங் களைச் சொந்த இடமாகக் கொண்ட மாண வர்கள் தமது இருப்பிட ஒழுங் குகளை தாமே செய்துகொள்ள வேண்டுமென பதிவாளர் அறிவித்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி தெற்கு, தீவகம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர் கள் விண்ணப்பிப்பின் தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படுமென உறுதியளிக்கப்பட்டுள்ளது.

வெளிமாவட்ட மாணவர்கள் தமது யாழ்ப்பாணப் பயணத்திற்கான அனுமதியை தத்தம் பிரதேசத்தில் பெற்று தமது விபரங் களை யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக சிரேஷ்ட உதவிப் பதிவாளருக்கு அறிவித்த தால் அவர் முன்னுரிமை அடிப்படையிலான பிரயாணத்திற்கு ஏற்ற ஒழுங்குகள் மேற் கொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிரயாண ஒழுங்குகளில் ஏற்படும் தாமதத்தினால் காலம் தாழ்த்தி வரும் மாணவர்களின் கல்விச் செயற்பாடு கள் பாதிக்காதவாறு பொருத்தமான நடவடிக் கைகளை சகல பீடங்களும் மேற்கொள்ளு மென யாழ்.பல்கலைக்கழக பதிவாளர் அறி வித்துள்ளார். (ச)

## இலங்கை இனப்பிரச்சினைக்கு...

ஆனால் அவர்கள் இந்தக் கொலைகளை, தாக்குதல்களை நடத்தினால் நாங்களும் தற்காப்புக்கு நடவடிக்கையை எடுக்க நேரிடும் என்றார் ஜனாதிபதி.

இலங்கை ஒற்றையாட்சி நாடாக இருக்கும் அதேவேளை இனப்பிரச்சினைக்கான தீர் வின் ஒரு பகுதியாக மாகாணங்களுக்கு அதி காரங்களைப் பகிர தான் தயாராக உள்ளதா கவும் ஒரே நாட்டுக்குள் இருக்கும் மக்களுக்கு அதி உச்ச அதிகாரப் பகிர்வினை வழங்கு வேன் என அவர் மேலும் கூறினார்.

தமது அண்டை நாடான இந்தியா இனப் பிரச்சினைக்கான தீர்வில் பெரும் பங்காற்ற வேண்டும் என எதிர்பார்ப்பதாகவும் வரலாற்று ரீதியாக இருநாடுகளுக்கும் இடையில் இருக் கின்ற கலாசார பாரம்பரிய உறவுகள் இந்த விடயத்தில் இந்தியா அதிக பங்களிப்பை வழங்க ஏதுவாக இருக்கும் என்றும் அவர் மேலும் கூறினார். (ச-3)

## உயர்தரப்...

கப்படும் என்று பரீட்சை கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சைக்கு தோற்றுவதற்கு தேசிய அடை யாள அட்டை மிகவும் அவசியம் என பரீட்சை கள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள் ளார். (ச-3)

## மட்டுவில்...

சம்பவ இடத்திலோ பணம் மற்றும் அவரின் கடவுச்சீட்டு என்பன காணப் படவில்லை என சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை களை மேற்கொண்ட சாவகச்சேரி மாவட்ட நீதிவான் அ.பிறேம்சங்கர் பிரேத பரிசோத னைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்தி யசாலையில் ஒப்படைக்குமாறு சாவகச்சேரி பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

## அனைத்துக்கட்சி...

தீர்ப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டிருந் தது.

எனினும் ஐ.தே.கவினால் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட தீர்வுத்திட்டத்திற்கு அமை வாக இனப்பிரச்சினைக்குரிய தீர்வை காண் பதற்கு எமது கட்சி முழு ஆதரவையும் வழங்கு மெனவும் அவர் தெரிவித்துள்ளார். (எ-1)

## அநுரா, மங்கள உட்பட...

ஆளும் சுதந்திரக்கட்சியின் மூத்த உறுப் பினரும் அமைச்சருமான அநுரா பண்டார நாயக்க, மங்கள சமரவீர மற்றும் சிறிபதி சூரி யாராட்சி ஆகிய மூவரும் நேற்று இரவு அமைச்சரவையில் இருந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் திடீரென நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

உடனடியாக அமுலுக்கு வரும் விதத்தில் இவர்கள் நீக்கப்பட்டமைக்கான காரணம் என்னவென நேற்றிரவுவரை அறிவிக்கப்பட வில்லை. எனினும் அண் மையில் மறுசீரமைக்கப் பட்ட அமைச்சரவையில் ஏற்பட்ட மாற்றங்களைத் தொடர்ந்து ஏற்பட்ட பலத்த முரண்பாடுகளே இதற் கான காரணம் என அரசி யல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

அண்மையில் மேற் கொள்ளப்பட்ட அமைச்சர வை மாற்றத்தின் போது அமைச்சர் அநுராபண் டார நாயக்கவிடம் இருந்த உல்லாசப் பயணத்துறை பறிக்கப்பட்டு அவர் தேசிய அரும் பொருட்கள் அமைச் சராக நியமிக்கப்பட்டார். அதேபோன்று மங்கள சமரவீரவிடம் இருந்த வெளி நாட்டு அமைச்சுப் பறிக்கப் பட்டு அவர் விமானப்போக்கு வரத்து மற்றும்துறை முகங் கள் அமைச்சராக நியமிக் கப்பட்டிருந்தார்.

இவர்களில் இன்னொரு சகாவான சிறிபதி சூரியா ராட்சி அமைச்சரவை அந்தஸ்து அற்ற துறை முகங்கள் அபிவிருத்தி அமைச்சராக நியமிக் கப்பட்டிருந்தார். அண்மையில் பிரதான எதிர் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியை சேர்ந்த 18 பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசுடன் இணைந்து கொண்டதற்காக அவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டன.

இதனால் சுதந்திரக்கட்சிக்குள் இருந்து பலத்த எதிர்ப்புக்கள் மறைமுகமாக கிளம்பி யுள்ளது. இதன் பின்னணியிலே இந்த மூன்று அமைச்சர்களும் அமைச்சரவை யில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இந்த திடீர்ப் பதவி நீக்கத்துக்கான கார ணம் என்ன என்பது உத்தியோகபூர்வமாக தெரிவிக்கப்படவில்லை. இருந்தபோதிலும் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அமைச் சரவை மாற்றத்தால் பெரும் அதிருப்தியடைந்தி ருந்த இம் மூவரும் ஜனாதிபதி மீது கடுமை யான விமர்சனங்களை முன்வைத்து வந் தார்கள்.ஐ.தே.க. உறுப்பினர்களை அரசு டன் இணைத்து அவர்களுக்கு அமைச்சர் பதவிகளை வழங்கியதையும் இவர்கள் கண்டித்தார்கள்.

இதை விட தொலைபேசி மூலமாக தனக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட தாகத் தெரிவித்த அநுரா பண்டாரநாயக்க ஜனாதிபதிக்கு நெருக்கமானவர்களே இக் கொலை அச்சுறுத்தலை விடுத்ததாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக பாராளுமன்றத்திலும் நேற்று முன்தினம் அநுரா பண்டாரநாயக்க கடுமையான உரை ஒன்றை நிகழ்த்தினார். அரசாங்கத்தின் மீதான விமர்சனங்கள் ஆளும் கட்சியிலிருந்தே வெளிவரத்தொடங் கியதை தொடர்ந்து கட்சிக்கட்டுப்பாட்டை மீறி செயற்படுபவர்கள் மீது கடுமையான நடவ டிக்கைகள் எடுக்கப்படும் எனத் தெரிவித்த ஜனாதிபதி நேற்று மாலை இம் மூன்று அமைச்சர்களையும் பதவி நீக்கம் செய்வதற் கான உத்தரவை வெளியிட்டார். (ச-3,5)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கல்விச் செயற்பாடுகளை மீள ஆரம்பித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் எதிர்வரும் 19.02.2007 ஆம் திகதி திங்கட்கிழமை மீள ஆரம்பிக்கப்படும்.

01) மாணவர்கள் தமது உணவை நியாயவிலையில் பல்கலைக்கழக சிற்றுண்டிச்சாலைகளில் பெற்றுக்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

02) மாணவர்களுக்கு தேவையான கற்றல் உபகரணங்களை மாணவர் மத்திய நிலையத்தில் நியாய விலையில் பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்படும்.

03) குடாநாட்டில் குறிப்பிட்ட சில பகுதிகளைத் தவிர்ந்த ஏனைய இடங்களைச் சொந்தவிடமாகக் கொண்ட மாணவர்கள் இருப்பிட ஒழுங்குகளை தாமே ஒழுங்குசெய்து கொள்ள வேண்டும்.

04) குடாநாட்டில் குறிப்பிட்ட சில பகுதிகளைச் (வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி தெற்கு, தீவகம்) சேர்ந்த மாணவர்கள் விண்ணப்பிப்பின் தங்குமிட வசதி செய்துகொடுக்கப்படும்.

05) வெளிமாவட்ட மாணவர்கள் தமது யாழ்ப்பாணப் பிரயாணத்துக்கான அனுமதியைத் தத்தம் பிரதேசத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும். பிரயாண அனுமதி பெற்றவர்கள் தமது விபரங் களை யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக சிரேஷ்ட உதவிப் பதிவாளருக்கு அறிவிப்பின் அவர் முன்னுரிமை அடிப்படையிலான பிரயாணத்திற்கு ஏற்ற ஒழுங்குகள் மேற்கொள்வார்.

06) பிரயாண ஒழுங்குகளில் ஏற்படும் தாமதத்தினால் காலம் தாழ்த்திவரும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படாதிருக்க பொருத்தமான நடவடிக்கைகளை சகல பீடங் களும் மேற்கொள்ளும்.

யாழ்.பல்கலைக்கழகம்,
09.02.2007

-பதிவாளர்.

(C-610)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.02.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.